**தலைப்பு – 234 உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 234 – உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆம் திகதிகணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 ஜுலை 06 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக் கூற்றுக்களினால் 2022 திசெம்பர் 31 திகதியன்று உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திறைசேரி கூற்று பிரகாரம் (SA 92) பொறுப்பக்கள் ரூபா 7,733,665 ஆன போதும், கணக்கில் குறிப்பு (iv) இல் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 1,845,655 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 திகதியன்று அத் தொகை தீர்திருக்கவில்லை. | உயர் நீதிமன்றத்தில் 2022.12.31 திகதி பிரகாரம் காணப்பட்ட பொறுப்பு மீதி ரூபா 1,845,655 அனதுடன், அப் பெறுமானத்தை பொறுப்பு பற்றிய கூற்றில் உரியவாறு உள்ளடக்கி உள்ளதாகவும் திறைசேரி SA – 92 கூற்றில் காட்டப்படும் மீதி சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் ஏற்பட்ட தொழில்நுட்ப வழுவின் மீது ஏற்பட்ட நிலைமையாகியதால் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திணைக்கள புத்தகங்கள், திறைசேரி புத்தகங்களுடன் ஒப்பீடு செய்ய பொறுப்பேற்க வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

மாதிரிக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுத்தாய்ந்து காட்டப்பட்டுகிறது.

| | அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| | நிதிப்பிரமாணம் 880 | | நிதிப்பிரமாணம் பிரகாரம் பிணை வைக்க வெண்டிய 21 அலுவலர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் அலுவலர்களினது பிணை வைப்பு தொடர்பாக இதுவரை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கவில்லை எனவும், மேல்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தின் வருடாந்த இடமாற் றத்தின் மீது அலுவலர்களினது நிறுவாக விடயங்கள் வேறுபட்டதால், 2022.12.31 திகதியன்று பிணை வைக்க வேண்டிய அலுவலர்களின் பிணை வைத்தல் தாமதமாகியுள்ளதுடன், தற்போது தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிந்தது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் பிணை வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| 2016.12.29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் 3.1 பந்தி | திணைக்களத்தின் 05 குழும வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் எரிபொருள் பாவனை பரிசோதனையொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | 04 வாகனங்களின் எரிபொருள் பாவனை பரிசோதிக்கப்பட்டுள்ள போதும் கொவிட் தொற்று நிலைமை, செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை மற்றும் QR குறியீட்டு முறை போன்வற்றின் காரணமாக எரிபொருள் செலவினத்தை மட்டப்படுத்த நேரிட்டதால் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள முடியாமலிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க பொறுப்பேற்க வேண்டும். |

**2.3 முற்பண விநியோகம் மற்றும் தீர்ப்பனவு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(1) பிரகாரம் நிமித்த உப கட்டநிதி வினியோகித்ததன் பின்னர் குறித்த கடமையை பூர்த்தி செய்து 10 நாட்களினுள் உப கட்டநிதியை தீர்க்க வேண்டிய போதும் 20 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 1,449,100 ஆன கட்டுநிதி தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முற்பணம் பெற்றிருக்காததுடன் முற்பணம் பெற்றுக் கொள்ளும் அலுவலர்களை அறிவூட்டி எதிர்காலத்தில் உரியவாறு முற்பணத்தை தீரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் பிரகாரம் கட்டுநிதியை தீர்க்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி 01 திகதியன்று நிதி நிலைமை கூற்று பிரகாரம் அரச உத்தியோகத்தரின் முற்பண 'பீ' கணக்கு மீதி ரூபா 39,056,664 ஆன போதும், 2022 சனவரி 01 திகதியன்று 'பீ' கணக்கிற்கு உரிய 'ஏசீஏ 05' கூற்றின் பிரகாரம் அது ரூபா 39,124,909 ஆனதில் 2022 திசெம்பர் 31 திகதியன்று முற்பன 'பீ' கணக்கின் மீதி திறைசேரி புத்தகங்களின் மீதியை விட ரூபா 68,246 கூடுதலாக நிதி நிலைமை கூற்றினுள் காட்டப்பட்டிருந்தது. 2021 ஆண்டு முதல் இவ் வித்தியாசம் தொடர்ந்தும் நிலவி வந்த போதும் அதனை இனங்காண்டு தீர்க்க நடடிவ்ககை எடுத்திருக்கவில்லை | அரச உத்தியோகத்தரின் முற்பண பீ கணக்கில் 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து நிலவி வரும் மீதியை தீர்த்துத் தருமாறு அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவித்தள்ளதுடன், திறைசேரியுடன் பலதடவைகள் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.<br><br>அதன் பிரகாரம் அரச நிதி சுற்றறிக்கை 01/2020 இன் 1 பகுதியின் 03 ஆம் பந்தியில் 3.1 பிரிவின் கீழ் உள்ள நி.பி 113 (6) மற்றும் அதன் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள வழிகாட்டி 01 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நீதிமன்ற அமைச்சினால் வழங்கியிருந்த 07 வாகனங்களின் சட்டரீதியான உரிமையை 2022 திசெம்பர் 31 திகதியன்று சுவீகரித்திருக்கவில்லை. | நீதிமன்ற அமைச்சிலிருந்து உயர் நீதிமன்ற திணைக்களத்தின் பயன்பாடிற்காக வழங்கியிருந்த 07 வாகனங்களும் தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (இ) | திணைக்களத்திற்கு சொந்மான வாகனமொன்று 2021 சனவரி 17 ஆம் திகதி முதல் 02 ஆண்டுகளிற்கு அதிக காலமாக பழுதடைந்த நிலையில் விளைவற்று நிலவிய போதும் திருத்தி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உயர் நீதிமன்றத்திற்கு உரிய 300-8344 கொண்ட மிட்சுபிசி லான்சர் வகையிலான கார் வண்டியை திருத்துவதற்கு உயர் நீதிமன்ற வாகனங்களை பரிசோதிக்கும் இயந்திர பொறியியலாளர் அவர்களுக்கு அனுப்பியுள்ளதாக திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | விரைவில் திருத்தங்களை மேற்கொண்டு வாகனங்களை பயன்படத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சேவையை விட்டுச் சென்றுள்ள அலுவலர் ஒருவரிடமிருந்த அறவிட வெண்டிய ரூபா 175,405 ஆன இடர் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்பொது சேவையை விட்டுச் சென்றுள்ள அலுவலரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் பற்றி எழுத்து மூலம் மற்றும் வாய் மூலம் அறிவித்ததன் பின்னர் 2023 மார்ச் முதல் பகுதிகளாக கடன் தொகையை மீள் அறவிட நடவடிக்கை எடுத்தள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் மீதியை விரைவில் அறவிட வேண்டும். |
| (உ) | 2022 ஆண்டினுள் உயர் நீதிமன்றத்தில் 15 வகையான வழக்குகளிற்குரிய தீர்க்கப்படவிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 6678 ஆனதுடன் ஆண்டினுள் தீர்த்து முடிவுறுத்திய வழக்குகளின் எண்ணிக்கை 1196 ஆகும். அது சதவீதமாக 18 சதவீதமானதுடன் ஆண்டு இறுதியில் தீர்கப்பட வேண்டியுள்ள வழங்குகளின் எண்ணிக்கை 5482 ஆனது. அதன் பிரகாரம் ஆண்டினுள் வழக்கு தீர்க்கப்படும் சதவீதம் குறைந்த மட்டத்தில் நிலவியது. | உயர் நீதிமன்றத்தில் 2022.01.01 திகதியன்று தீர்க்கப்படவிருந்த மொத்த வழங்குகளின் எண்ணிக்கை 5021 ஆவதுடன், 2022 ஆண்டினுள் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1657 எனவும் 2022 ஆண்டினுள் முடிவுறுத்தப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 1196 எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | வழங்குகளை உரிய காலத்தினுள் தீர்த்து முடிவுறுத்த வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டினுள் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினுள் 23 வழக்கு வகைகளுக்கான தீர்ப்பதற்கு தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 4595 ஆனதுடன் ஆண்டினுள் தீர்த்து முடிறுத்திய வழக்குகளின் எண்ணிக்கை 1172 ஆனது. இது சதவீதமாக நூற்றுக்கு 25 ஆனதுடன் ஆண்டிறுதியல் தீர்க்கப்படவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 3423 ஆனது. அதன் பிரகாரம் மேல்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தினுள்ளும் வழக்கு தீர்க்கப்படும் முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் 2022.01.01 திகதியன்று தீர்க்கப்படவிருந்த மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 3563 ஆவதுடன், 2022 ஆண்டினுள் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 1032 எனவும், 2022 ஆண்டினுள் முடிவுறுத்திய மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 1172 எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | வழங்குகளை உரிய காலத்தினுள் தீர்த்து முடிவுறுத்த வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களத்தின் அங்கீகார மொத்த ஆளணி 558 ஆனதுடன் அத்திகதியன்று | நிலுவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக நீதிமன்ற அமைச்சினூடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்து கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறான ஆளணி 428 ஆனது. அதன் பிரகாரம் 130 அலுவலர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன. | அவர்களிடம் மற்றும் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கணக்களார் III பதவிக்காக வேறொரு திணைக்களத்தின் கணக்காளர் ஒருவர் கிழமை நாட்களில் 02 நாட்கள் பதிற்கடமை அடிப்படையின் மீது கடமையில் ஈடுபடுத்தியிருந்ததுடன் அப் பதவி 2022 சனவரி 03 ஆம் திகதி முதல் ஓராண்டிற்கு அதிக காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. | நிலுவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக நீதிமன்ற அமைச்சினூடாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் மற்றும் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உயர் நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்திற்கு மொழிபெயர்பாளர், நூலக அதிபர், கணக்கு உதவியாளர், நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் ஆகிய பதவிகளுக்காக அங்கீகார ஆளணி முறையே 14, 05, 15, 31 ஆன போதும் திசெம்பர் 31 திகதியளவில் அப் பதவிக்காக இணைக்கப்பட்டுள்ள உள்ளவாறான ஆளணி முறையே 08, 04, 08, 16 ஆனதில் அங்கீகார ஆளணி எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் உள்ளவாறான ஆளணி எண்ணிக்கை 50 சதவீதத்திலும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக நீதிமன்ற அமைச்சினால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களிடம் மற்றும் நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு செயலாளரிடம் கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மேல் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்திற்கு அங்கீகார மொழிபெயர்பாளர் பதவி 10 ஆனபோதும் திசெம்பர் 31 திகதியளவில் அதற்காக எவறும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்ற அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நீதிமன்ற அமைச்சின் மூலம் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நியதிச் சட்ட மொழிபெயர்பாளர் அலுவலர் அலகு மூலம் முன்னைய ஆண்டுகளின் கடமை காப்பு செய்த போதும் இவ்வாண்டு அவ் அலகிற்காகு இது வரை அங்கீகாரம் கிடைக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மேல் முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் அலுவலகத்தினுள் நீதிமன்ற எழுதுவிளைஞர் புத்தக கட்டுனர் பதவிகளில் அதிக பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அப் பெறுமானம் முறையே 10 மற்றும் 08 ஆனது. | மேல் முறையீட்டு நீதிமன்ற் எழுதுவிளைஞர் வெற்றிடங்களை நிகழ்சித் திட்ட உதவியாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் நீதிமன்ற தட்டெழுத்து அலுவலர் ஊடாவும், புத்தக கட்டுனர் வெற்றிடங்களை தற்போதுள்ள அலுவலர்களின் மூலமும் முடியுமான வரையில் காப்புச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை விரைவில் பூர்த்தி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |